DEPUTY SECRETARY, ASSEMBLY: There are two methods of appointment for the post of Secretary to Council. One is by promotion among Class II Officers of the Corporation of Chennai and the other is on deputation among the Officers not below the rank of Section Officer in the Law Department or Legislative Assembly Secretariat. Have you appointed anybody by this method?

அரசு இணைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை: இதுவரையிலும் அந்தப் பணிக்கு யாரையும் நியமனம் செய்யவில்லை.

திரு. மு. திராவிடமணி: இதுவரைக்கும் யாரையும் appoint செய்யவில்லை என்றால் retrospective effect ஏன் வருகிறது? Secretary-ன் role என்ன என்பதை explain செய்யுங்கள்.

துணைச் செயலாளர், சட்டமன்றம்: இப்போது Secretary to Council post–ல் யாராவது இருக்கிறார்களா?

அரசு இணைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை: இப்போது கவுன்சிலில் இருக்கிற ஒருவரே redeployment-ல் அந்தப் பதவியில் in-charge ஆக இருக்கிறார். He assists the Council in certain legal implications. For example, resolution போடுவதில் அவரது பணி மிக முக்கியமானது. முக்கியமான ஷரத்துக்களைப் பற்றி தீர்மானம் போட வேண்டிய அவசியம் என்ன என்று விளக்கம் சொல்வது, தேர்தல் சம்பந்தப்பட்ட விஷயங்களில் அறிவுரை சொல்வது போன்றவற்றை கையாள்வது Secretary to Council-தான். திட்டங்களைப் பற்றி யாரும் சுலபமாக சொல்லிவிடலாம். ஆனால் சட்டம் சார்ந்தவற்றை இவர் கையாள்கிறார்.

திரு. மு. திராவிடமணி: அந்தப் பதவிக்கு எந்தத் துறையிலிருந்து எடுக்கிறார்கள். What is the mode of appointment?

அரசு இணைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை:

- சென்னை மாநகராட்சியின் வகுப்பு II அலுவலர்களுள் ஐந்தாண்டுகளுக்கு குறையாத காலம் அத்தகைய அலுவலர்களாகப் பணியாற்றியவர்களிலிருந்து பதவி உயர்வு வாயிலாக; அல்லது

- தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்தில் பிரிவு அலுவலர் நிலைக்குக் குறையாத பதவி வகிக்கும் அலுவலர்களுள் அத்தகைய அலுவலர்களாக ஐந்தாண்டுகளுக்குக் குறையாத காலம், i) தமிழ்நாடு அரசு சட்டத் துறையில் அல்லது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகத்தில்; அல்லது

  ii) தமிழ்நாடு மாநிலத்தில் வேறு ஏதாவது மாநகராட்சியில்; அல்லது

  iii) மைய அரசின் பாராளுமன்ற விவகார அமைச்சகத்தில் பணியாற்றியவர்களில் இருந்து அயற்பணி நியமனம் வாயிலாக; அல்லது

- மாவட்ட நீதிமன்றத்தில் அல்லது அதற்கும் மேற்பட்ட நிலை நீதிமன்றங்களில் ஏழு ஆண்டுகளுக்கும் குறையாத காலம் வழங்குரைஞர்களாகப் பணிபுரிந்து கொண்டிருக்கும் வழங்குரைஞர்கள் சங்க உறுப்பினர்களிலிருந்து நேரடி நியமனம் வாயிலாக மன்றச் செயலாளராக பணி நியமனம் செய்யலாம்.

வார்டு பிரிப்பது, தேர்தல் சம்பந்தப்பட்ட விஷயங்கள் போன்ற சட்டம் சார்ந்தவற்றுக்கு மன்றத்திற்கு விளக்கம் அளிப்பது, மன்றத்திற்கு ஆலோசனை வழங்குவது ஆகியவை மன்றச் செயலாளரின் செயல்பாடுகள் ஆகும். மன்றச் செயலாளர், விதிகள் குறித்த அனுபவம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

திரு. மு. திராவிடமணி: ஏற்கெனவே பணியில் உள்ளவர்களைத்தான் மன்றச் செயலாளராக நியமனம் செய்கிறீர்களா? Method of appointment அதுதானா?

அரசு இணைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை: பதவி உயர்வு வாயிலாகவோ, அயற்பணி நியமனம் வாயிலாகவோ, சங்க உறுப்பினர்களிலிருந்து நேரடி நியமனம் மூலமாகவோ போதிய கல்வித் தகுதி மற்றும் அனுபவம் உள்ளவர்களை மட்டுமே மன்றச் செயலாளராக நியமனம் செய்கிறோம்.

திரு. மு. திராவிடமணி: இதனால் Regular promotion–ல் பாதிப்பு வராதா?

அரசு இணைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை: தகுதி உள்ளவர்களை, பணி மூப்பு அடிப்படையில் தேர்வு செய்து மன்றத்தின் தீர்மானத்தின்படிதான் மன்றச் செயலாளர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள்.

துணைச் செயலாளர், சட்டமன்றம்: Retrospective effect ஆக கொடுத்துள்ளீர்கள்? அதற்கு என்ன காரணம்?

அரசு இணைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை: தவறாக போடப்பட்ட விதி நடைமுறையில் இருந்ததுபோல் ஆகிவிடும் என்பதால் Retrospective effect ஆக கொடுத்துள்ளோம்.

சார்புச் செயலாளர், சட்டமன்றம்: இதற்கு சட்டத்தில் provision இருக்கிறதா?

திரு. மு. திராவிடமணி: இது Service Manual–ல் வருகிறதா?

அரசு இணைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை: ஆமாம்.

திரு. மு. திராவிடமணி: Service Manual–ல் வரும்போது ஏன் தனியாக Notification கொடுக்கிறீர்கள். அது routine process, administrative adjudication–ல் வரும். Service Manual–ல் வரும்போது அதற்கான Rights and Liabilities என்ன என்று விவரிக்கப்பட்டிருக்கும். அதற்குப் பிறகு தனியாக Notification போடுவது அவசியமா?

அரசு இணைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை: Service Manual–ல் service conditions குறித்து சொல்லப்பட்டிருக்கும். உதாரணத்திற்கு முன்பு அரசுப் பணிக்கு பத்தாம் வகுப்பு படித்திருந்தால் போதும் என்றிருந்தது. தற்போது பல பதவிகளுக்கு பட்டப்படிப்பு அல்லது முதுகலை பட்டப்படிப்பு அவசியம் என்ற நிலை வரும்போது, தரமான, திறமையான, அனுபவம் வாய்ந்த பணியாளர்களை நியமனம் செய்ய வேண்டும் என்பதற்காக தேவைக்கேற்ப method of recruitment / service conditions–ல் மாற்றம் கொண்டு வர வேண்டியது அவசியமாகிறது.

துணைச் செயலாளர், சட்டமன்றம்: Service rules provision படிதான் Notification செய்திருக்கிறார்கள். There is a delay of 1 ½ years in placing the above Notification on the Table of the House, after its publication in the Tamil Nadu Government Gazette Extraordinary dated 4-3-2014.

அரசு இணைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை: இனிவருங்காலங்களில் இதுபோன்ற தாமதம் ஏற்படாதவாறு பார்த்துக்கொள்கிறோம்.

After some discussion, the Committee decided not to recommend any modification.

MEMORANDUM NO. 5 / 2018 – 2019

Sub: Amendment to the Tamil Nadu Municipal Corporations Wards Committee (Powers and Functions) Rules, 1996.

(G.O.Ms.No.61, Municipal Administration and Water Supply (Election) Department, dated:24.3.2015)

The Deputy Secretary stated that in exercise of the powers conferred by Section 347 of the Chennai City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919), Section 431 of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971), Section 430 of the Coimbatore City Municipal Corporation Act, 1981 (Tamil Nadu Act 25 of 1981), read with Sections 8 and 11 of the Tiruchirappalli City Municipal Corporation Act, 1994 (Tamil Nadu Act 27 of 1994), Tirunelveli City

Municipal Corporation Act, 1994 (Tamil Nadu Act 28 of 1994) and Salem City Municipal Corporation Act, 1994, (Tamil Nadu Act 29 of 1994), the Government issued amendment to the Tamil Nadu Municipal Corporations Wards Committee (Powers and Functions) Rules, 1996.

The Committee observed that there was a delay of more than 2 years in placing the above notification on the Table of the House, after its publication in the Tamil Nadu Government Gazette Extraordinary dated 24-3-2015.

The Committee further observed that in the existing sub-rule 1 of rule 2, the names of six Municipalities Acts have been brought under the definition of **'Act'**. The Committee may consider whether the names of remaining six Municipal Corporations Acts may be suitably added after the expression "Salem Municipal Corporation" occurring under the definition **'Act'** in sub-rule (1) of rule (2) of the rules.

துணைச் செயலாளர், சட்டமன்றம்: Salem Municipal Corporation Act–க்குப் பிறகு திருப்பூர், ஈரோடு, வேலூர், தூத்துக்குடி, திண்டுக்கல், தஞ்சாவூர் ஆகிய ஆறு Municipal Corporation Act–களின் பெயர்கள் Definition Clause–ல் சேர்க்கப்படாததற்குக் காரணம் என்ன?

அரசு இணைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை: Coimbatore City Municipal Corporation Act–க்கு பிறகு போடப்பட்ட Act–களில் Section (8)–ல் all the provisions available to the Coimbatore City Municipal Corporation Act will automatically apply to the existing and upcoming City Municipal Corporations என்று சொல்லப்பட்டிருக்கிறது. கோயம்புத்தூர் மாநகராட்சியின் சட்டம் தற்போதுள்ள மற்றும் ஏற்படுத்தப்படவுள்ள மாநகராட்சிகளுக்கும் பொருந்தும் என்று சொல்லப்பட்டுள்ளது.

திரு. மு. திராவிடமணி: அது எப்படி பொருந்தும்.

அரசு இணைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை: எல்லா provisions–ம் பொருந்தாது. ஆனால் சில provisions மட்டும் பொருந்தும்.

திரு. மு. திராவிடமணி: இது General Act கிடையாது. ஒவ்வொரு மாநகராட்சிக்கும் தனித்தனியாக பரப்பளவு மற்றும் மக்கள்தொகை இருக்கும். அப்படி இருக்கும்போது அவை ஒன்றுக்கொன்று மாறுபடும்.

அரசு இணைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை: பரப்பளவு மற்றும் மக்கள்தொகை போன்ற provisions தனித்தனியாக இருக்கும். தேர்தல் எப்படி நடத்தப்படும் போன்ற Procedure of administration அனைத்து மாநகராட்சிக்கும் பொருந்தும்.

துணைச் செயலாளர், சட்டமன்றம்: தற்போது திருப்பூர், ஈரோடு, வேலூர், தூத்துக்குடி, திண்டுக்கல், தஞ்சாவூர் ஆகிய ஆறு Municipal Corporation Act–களின் பெயர்கள் Definition Clause–ல் சேர்க்கப்பட்டுள்ளதா? அறிவிக்கை 2015 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளது. ஆனால் மேலே குறிப்பிட்ட ஆறு மாநகராட்சிகளும் 2015 ஆம் ஆண்டிற்கு முன்பே உருவாக்கப்பட்டுவிட்டன.

அரசு இணைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை: Salem Municipal Corporation Act வரைக்கும் சேர்த்திருக்கிறோம். அதற்குப் பிறகு போடப்பட்ட Acts அனைத்தும் Coimbatore City Municipal Corporation Act–ஐ invoke செய்து போடப்பட்டுள்ளன. குழு அறிவுறுத்தியவாறு அனைத்து Act–களிலும் Definition Clause–ல் மாநகராட்சியின் பெயர்களை சேர்த்துவிடுகிறோம்.

அரசு இணைச் செயலாளர், சட்டத் துறை: மீதமுள்ள ஆறு மாநகராட்சிகளின் பெயர்களையும் தனியாக Definition Clause–ல் சேர்க்க வேண்டும்.

அரசு இணைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை: அவற்றை தனித்தனியாக Definition Clause–ல் சேர்க்க நடவடிக்கை எடுக்கிறோம்.

திரு. செ. ராஜேஷ் குமார்: தனி Notification கொடுத்து செய்துவிடுங்கள்.

After some discussion, the Committee recommends that whether the names of remaining six Municipal Corporations Acts may be suitably added after the expression "Salem Municipal Corporation" occurring under the definition 'Act' in sub-rule (1) of rule (2) of the rules.

MEMORANDUM NO. 6 / 2018 – 2019

Sub: The Date of commencement of the Tamil Nadu Act 23 of 2014, Framing of the Tamil Nadu Municipalities (Regulation of sinking of Wells and Safety Measures) Rules, 2015 and Notifications issued under the Chennai Metropolitan Area Groundwater (Regulation) Act, 1987 - Reg.

(G.O.Ms.No.72, Municipal Administration and Water Supply (MA1) Department, dated 30.4.2015)

NOTIFICATION - I

No modification was recommended.

NOTIFICATION - II

The Deputy Secretary further stated that in exercise of the powers conferred by Section 303 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), Section 431 of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil nadu Act 15 of 1971) and Section 430 of the Coimbatore City Municipal Corporation Act, 1981 (Tamil Nadu Act 25 of 1981), read with Section 11 of the Tiruchirappalli City Municipal Corporation Act, 1994 (Tamil Nadu Act 27 of 1994), Tirunelveli City Municipal Corporation Act, 1994 (Tamil Nadu Act 28 of 1994), Salem City Municipal Corporation Act 1994 (Tamil Nadu Act 29 of 1994) and Section 10 of Tiruppur City Municipal Corporation Act, 2008 (Tamil Nadu Act 7 of 2008), Erode City Municipal Corporation Act, 2008 (Tamil Nadu Act 8 of 2008), Vellore City Municipal Corporation Act, 2008 (Tamil Nadu Act 26 of 2008), Thoothukudi City Municipal Corporation Act, 2008 (Tamil Nadu Act 27 of 2008), Thanjavur City Municipal Corporation Act, 2013 (Tamil Nadu Act 24 of 2013) and Dindigul City Municipal Corporation Act, 2013 (Tamil Nadu Act 25 of 2013), the Government issued the Tamil Nadu Municipalities (Regulation of Sinking of Wells and Safety Measures) Rules, 2015.

(G.O.Ms.No.74, Municipal Administration and Water Supply (MA1) Department, dated 30.4.2015)

No modification was recommended.

(G.O.Ms.No.73, Municipal Administration and Water Supply (MA1) Department, dated 30.4.2015)

No modification was recommended.

துணைச் செயலாளர், சட்டமன்றம்: அரசாணையில் நிறைய பாதுகாப்பு வழிமுறைகள் குறித்து சொல்லியிருக்கிறீர்கள். கிணறுகளைத் தோண்டும்போதும், ஆழப்படுத்தும்போதும் பின்பற்றப்பட வேண்டிய safety measures குறித்து சொல்லும்போது, என்னென்ன விதமான safety measures-ஐ follow செய்கிறீர்கள்.

அரசு இணைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை: பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து Rule 6-ல் கீழ்வருமாறு கொடுத்திருக்கிறோம்.

"(1) Every holder of the permit or owner of a well in use or disuse, shall, while sinking, deepending or rehabilitating a well,-

(a) ensure that the person executing such work has followed all the safety measures prescribed in sub-rule (2)

(b) verify that the person executing such work has a valid Certificate of Registration granted under these rule in Form-F.

(c) ensure that the well is not left uncovered during recess or cessation of work; and

(d) fill up abandoned wells upto the ground level using clay, sand, boulder or any other suitable materials"

என்று கொடுத்திருக்கிறோம். ஏற்கெனவே இருப்பதை deepen செய்வதானாலும் சரி, புதிதாக ஒன்று போடுவதானாலும் சரி, பழையதை renovate செய்வதானாலும் சரி, எதுவாக இருந்தாலும், என்ன action எடுத்தாலும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கோ அல்லது உள்ளாட்சி அமைப்புக்கோ அதுகுறித்து முறையான விண்ணப்பம் அளித்து ஒப்புதல் பெற வேண்டும்.

திரு. மு. திராவிடமணி: யார் விண்ணப்பம் அளிக்க வேண்டும்? நிலம் வைத்திருப்பவர்களா அல்லது போர் போடுகிறவர்களா?

அரசு இணைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை: முதலில் Rig வைத்திருப்பவர்களுக்கு ஏற்கெனவே உரிமம் வழங்கிவிடுகிறோம். நில உரிமையாளர் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பிடம், எந்த இடத்தில் போர் போட வேண்டும் என்றும், என்ன உபயோகத்திற்காக பொதுவாக விவசாயத்திற்கு என்றால் அதைக் குறிப்பிட்டு, எவ்வளவு ஆழம் போடுவது போன்ற விவரங்களைக் குறிப்பிட்டு மாநகராட்சியாக இருந்தால் கமிஷனருக்கோ அல்லது உள்ளாட்சி அமைப்பாக இருந்தால் Executive Officer-க்கோ தகுந்த விண்ணப்பப் படிவம்மூலம் விண்ணப்பம் செய்ய வேண்டும். அதற்கு 100 ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும். NOC அல்லது அனுமதி பெற்ற பிறகுதான் உரிமம் பெற்ற Rig வைத்திருப்பவர்கள் போர் போடுகிறார்கள்.

துணைச் செயலாளர், சட்டமன்றம்: பாதுகாப்பு ஏற்பாடுகளை யார் உறுதி செய்வது?

அரசு இணைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை: கமிஷனர் அல்லது சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு அலுவலர்கள் அந்த இடத்தை ஆய்வு செய்து அதை உறுதி செய்கின்றனர். அவர்கள்தான் NOC கொடுக்கிறார்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: இவ்வளவு ஆழம் போட வேண்டுமென்று ஏதாவது விதி இருக்கிறதா?

அரசு இணைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை: அது ஒவ்வொரு இடத்தைப் பொறுத்தது. வறண்ட பகுதிகளில் பொதுவாக குடிநீருக்குப் போகத்தான் போர் போட முடியும். உள்ளூரில் உள்ள மக்கள் சில சமயங்களில் ஏதேனும் பிரச்சினை செய்ய நேரிடலாம். ஏனென்றால் அவர்களுடைய குடிநீர் பிரச்சினைக்குத்தான் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது.

திரு. மு. திராவிடமணி: சில சமயங்களில் இந்த மாதிரி NOC வாங்கிவிட்டு R.O.Plant போடுகிறார்களே அதற்கு நீங்கள் என்ன நடவடிக்கை எடுக்கிறீர்கள்?

அரசு இணைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை: அது பற்றி ஏதாவது புகார் வர நேர்ந்தால் அந்த இடத்திற்கு வந்து முறையாக bore போடப்படுகிறதா என்று வந்து கள ஆய்வு செய்வார்கள்.

துணைச் செயலாளர், சட்டமன்றம்: பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு என்னென்ன வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன?

அரசு இணைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை: இடத்தை முதலில் தேர்வு செய்ய வேண்டும். பின்னர், இருக்கிற bore-ஐ தூர் வாருகிறோமா அல்லது புதியbore போடுகிறோமா என்று பார்க்க வேண்டும். பின்னர் electrical or mechanical controversies ஏதேனும் உள்ளதா என்று பார்த்து போர்டு ஒன்று வைக்க வேண்டும். ஏனென்றால் bore போடும் சமயங்களில் அந்த இடத்திற்கே போக முடியாது. பூமிக்குக் கீழே 3 அடி பூமிக்கு மேலே 3 அடி என்று அளவீடு செய்து, சுற்றி கான்கிரீட் சிமெண்ட் பூசிவிட்டு bore இறக்குவார்கள். கடைசியாக, bore இறக்கி முடிந்த பிறகு ஸ்டீல் வலை வைத்து மூட வேண்டும். இதுதான் விதிமுறை.

திரு. செ. ராஜேஷ் குமார்: எவ்வளவு முன்னேற்பாடுகள் செய்தாலும் அதையும் மீறி ஏதாவது விபத்து ஏற்படுகிறதே. Bore போட்ட பின்பு அந்த இடத்தில் fencing செய்வதே இல்லையே?

திரு. மு. திராவிடமணி: Execution-ல் நிறைய complaints வருகிறதே அதை எப்படி தடுக்கிறீர்கள்?

அரசு இணைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை: அவ்வாறு தவறு செய்பவர்களின் உரிமங்களை இரத்து செய்துவிடுகிறார்கள்.

திரு. மு. திராவிடமணி: ஒழுங்காக செய்கிறார்களா என்று சரியாக ஆய்வு செய்தால் இந்த மாதிரி பிரச்சினைகள் வராது. போர் போட்டுவிட்டு அதில் தண்ணீர் வரவில்லை என்றால் அப்படியே விட்டுவிட்டுப் போய் விடுகிறார்கள். அது அப்படியே dry ஆகிவிடுகிறது. சில மாதங்கள் கழித்து திரும்பவும் வந்து போர்வெல் rig போடுகிறார்கள். There is an immediate threat to life; but there is no deterrent effect. There is no follow-up action. It is a national waste; Scientific approach எதுவும் இதில் இல்லை. முதலில் bore போட ஆரம்பித்துவிட்டு பிறகு மின்சார இணைப்புக்கு விண்ணப்பம் செய்கிறார்கள். அங்கு மின்சார இணைப்பு கிடைக்கவில்லை என்றவுடன் போரை அப்படியே நிறுத்திவிட்டு மூடாமல் விட்டுவிடுகிறார்கள். It is applicable not only for bore well but also for well.

திரு. செ. ராஜேஷ் குமார்: கேரள மாநிலத்தில் bore போடுவதற்கு அரசாங்கத்திடம் அனுமதி பெற வேண்டும். தமிழ்நாட்டிலும் அந்த விதி இருக்கிறது, ஆனால் யாரும் விதிகளை follow செய்வதில்லை.

செயற் பொறியாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி: கட்டடம் கட்டுவதற்கு என்ன விதிகள் பின்பற்றப்படுகின்றவோ, அதே விதிகள்தான் borewell போடுவதற்கும் follow செய்கிறோம். அதை follow செய்தால் பிரச்சினை ஏற்படாது.

அரசு இணைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை: உள்ளாட்சிக்கு சொந்தமான இடங்களில் 100 மீட்டர் சுற்றளவுக்குள் உள்ள இடங்களில் போர் போட அனுமதி அளிப்பதில்லை.

தலைவர்: இதுசம்பந்தமாக வரம்பு மீறும் உரிமையாளர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அபராதத் தொகை விதிக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

After some discussion, the Committee recommends that severe action should be taken against the owners those who violates the rules in relation to sinking of new wells or rehabilitation or deepening of existing well.

MEMORANDUM NO. 7 / 2018 – 2019

Sub: Amendments to the Tamil Nadu Municipal Engineering Service Rules, 1997.

(G.O.Ms.No.134, Municipal Administration and Water Supply (ME3) Department, dated 7.9.2015)

The Deputy Secretary stated that in exercise of the powers conferred by sub-section (1) of section 303, read with section 77-A of the Tami Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the Government issued amendments to the Tamil Nadu Municipal Engineering Services Rules, 1997.

In the Seventeenth Report (XI Assembly) and Eight Report (XIV Assembly) of the Committee on Delegated Legislation had recommended that a 'Note' to a rule will not have the force of a rule and it should be replaced by a 'Rule'. Based on the recommendation of Delegated Legislation Committee the Government issued the above amendment to omit the headings of "Note" and the clauses there under in the said Rules.

DEPUTY SECRETARY, ASSEMBLY: As per the recommendations of the Delegated Legislation Committee, the Government issued above amendment to omit the headings of Note and the clauses there under in the said Rules. இதனை நடைமுறைப்படுத்துகிறீர்களா?

அரசு இணைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை: ஆம், நடைமுறைப்படுத்துகிறோம்.

தலைவர்: இதனை குழுவின் பரிந்துரையின்மீதான அரசின் மேல் நடவடிக்கை அறிக்கையாக (Statement of Action Taken Report) எடுத்துக்கொள்ளலாம்.

துணைச் செயலாளர், சட்டமன்றம்: Amendment கொண்டு வந்த பிறகு further recruitment செய்திருக்கிறீர்களா?

அரசு இணைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை: அரசாங்கம் recruitment செய்வதில்லை. Lower level–லிலேயே recruitment செய்கிறார்கள். முக்கியமாக Promotion–ல் தான் recruitment செய்கிறார்கள். Vacancies இருந்தால் Direct recruitment–ல் செய்கிறார்கள். குழு அறிவுறுத்தியதுபோல Amendment issue செய்திருக்கிறோம்.

DEPUTY SECRETARY, ASSEMBLY: The Committee appreciates the Department for taking necessary action for issue of the said Amendment.

The Committee appreciates the Department for issue of amendment to omit the headings of Note and the clauses there under in the said Rules, as per the recommendations of the Committee.

MEMORANDUM NO. 8 / 2018 – 2019

Sub: The Tamil Nadu Municipal Laws (Amendment) Act 2015, (Tamil Nadu Act 12 of 2015) - Bringing into force - Notification - Issued - Regarding.

(G.O.Ms.No.39, Municipal Administration and Water Supply (Election) Department, dated 19.2.2016)

The Deputy Secretary stated that under sub-section (2) of Section 1 of the Tamil Nadu Municipal Laws (Amendment) Act, 2015 (Tamil Nadu Act 12 of 2015), the Government appointed the 20th February, 2016 as the date on which the said Act shall came into force.

The Committee observed that there was a delay of 1 year and 4 months for placing the Notification before the Table of the House after its publication in Tamil Nadu Government Gazette Extra-Ordinary, dated 20.2.2016.

துணைச் செயலாளர், சட்டமன்றம்: Tamil Nadu Municipal Laws (Amendment) Act அமலுக்கு வரவிருக்கிறது இல்லையா?

அரசு இணைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை: ஆம்.

DEPUTY SECRETARY, ASSEMBLY: There is a delay of 1 year and 4 months in placing the Notification before the Assembly after its publication in the Tamil Nadu Government Gazette. Subordinates–க்கு strict ஆக instructions கொடுத்து ஆறு மாதத்திற்குள் சட்டமன்றத்தில் அறிவிக்கையை வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசு இணைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை: இனிவருங்காலங்களில் இதுபோன்ற தாமதம் ஏற்படாதவாறு பார்த்துக்கொள்கிறோம்.

After some discussion, the Committee decided not to recommend any modifications.

MEMORANDUM NO. 9 / 2018 – 2019

Sub: Amendments to the Tamil Nadu Town Panchayats, Third Grade Municipalities, Municipalities and Corporations (Elections) Rules, 2006.

(G.O.Ms.No.60, Municipal Administration and Water Supply (Election) Department, dated: 3.3.2016)

The Deputy Secretary stated that in exercise of the powers conferred by Section 303 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), Section 347 of the Chennai City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919), Section 431 of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971), Section 430 of the Coimbatore City Municipal Corporation Act, 1981(Tamil Nadu 25 of 1981), read with Sections 8 of the Tiruchirappalli City Municipal Corporation Act 1994 (Tamil Nadu Act 27 of 1994), Tirunelveli City Municipal Corporation Act, 1994 (Tamil Nadu Act 28 of 1994) and Salem City Municipal Corporation Act, 1994, (Tamil Nadu Act 29 of 1994), the Government issued amendments to the Tami Nadu Town Panchayats, Third Grade Municipalities, Municipalities and Corporations (Elections) Rules, 2006.

The Committee observed that there was a delay of more than one year in placing the above Notification on the Table of the House, after its publication in the Tamil Nadu Government Gazette Extraordinary dated 3.3.2016.

துணைச் செயலாளர், சட்டமன்றம்: இந்த விதியிலும் திருப்பூர், ஈரோடு, வேலூர், தூத்துக்குடி, திண்டுக்கல், தஞ்சாவூர் ஆகிய ஆறு Municipal Corporation Act–களின் பெயர்கள் Definition Clause–ல் சேர்க்கப்படவில்லை?

அரசு இணைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை: Routine ஆக Coimbatore City Municipal Corporation Act–ஐ invoke செய்து சட்டம் போட்டிருப்பதால் திருப்பூர், ஈரோடு, வேலூர், தூத்துக்குடி, திண்டுக்கல், தஞ்சாவூர் ஆகிய ஆறு Municipal Corporation Act–களின் பெயர்கள் Definition Clause–ல் விடுபட்டுள்ளது.

துணைச் செயலாளர், சட்டமன்றம்: 2013 ஆம் ஆண்டிற்குப் பிறகு விடுபட்டவற்றை Definition Clause–ல் சேர்க்க வேண்டும்.

அரசு இணைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை: இது போன்ற நேர்வுகள் முன்பு நிறைய இருந்தன. இனி வருங்காலங்களில் ஒவ்வொரு மாநகராட்சியின் பெயரையும் Definition Clause–ல் சேர்த்துவிடுகிறோம்.

After some discussion, the Committee decided not to recommend any modifications.

Thursday, the 12th October, 2018

The Committee on Delegated Legislation met at 10-30 a.m. on Friday, the 12th October, 2018 in the Kumanan Government Guest House, Coimbatore.

The following Members were present:

CHAIRMAN

Thiru S. Ravi

MEMBERS

Thiru V.P. Sivasubramani
Thiru O.K. Chinnaraj
Thiru M. Thiravidamani
Thiru Y. Prakaash
Thiru T. Mano Thangaraj
Thiru S. Rajesh Kumar

SECRETARIAT

Thiru G. Ganesh	-	Deputy Secretary
Thiru S.R. Ravi	-	Under Secretary

During the meeting, Thiru S. George Alexander, Joint Secretary to Government, Law Department was also present.

துணைச் செயலாளர்: மதிப்பிற்குரிய குழுத் தலைவர் அவர்களுக்கும் இந்தக் குழுக் கூட்டத்திற்கு வருகை புரிந்திருக்கும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் என்னுடைய வணக்கத்தையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவை மாநகரத்திலே இப்படி ஒரு சிறப்பான கூட்டத்தை இரண்டாவது நாளாக ஏற்படுத்திக் கொடுத்த தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கும் சட்டமன்றப் பேரவைச் செயலாளர் அவர்களுக்கும் மாவட்ட நிருவாகத்திற்கும், துணை ஆணையர் (கலால்) திரு. எம். பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும், முதுநிலை மண்டல மேலாளர் திரு. எம்.எஸ். கலைவாணி அவர்களுக்கும், மாவட்ட மேலாளர் திரு. பி. சுரேஷ் அவர்களுக்கும், கோட்ட கலால் அலுவலர்கள் திரு. விக்டர் மற்றும் திரு. முருகானந்தம் அவர்களுக்கும் இச்செயலகத்தின் சார்பாக பாராட்டுதல்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். குழுவின் தலைவர் அவர்களை இரண்டாவது நாள் கூட்டத்தைத் தொடங்கிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தலைவர்: சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் இரண்டாவது நாள் கூட்டத்திற்கு வருகை தந்துள்ள மாண்புமிகு திரு. திராவிடமணி அவர்களே, மாண்புமிகு திரு. மனோ தங்கராஜ் அவர்களே, மாண்புமிகு திரு. பிரகாஷ் அவர்களே, மாண்புமிகு திரு. செ. ராஜேஷ் குமார் அவர்களே மாண்புமிகு திரு. சின்னராஜ் அவர்களே, மாண்புமிகு திரு. சிவசுப்பிரமணி அவர்களே மற்றும் துணைச் செயலாளர் திரு. ஜி. கணேஷ் அவர்களே, சார்புச் செயலாளர் திரு. எஸ்.ஆர். ரவி அவர்களே, சட்டத் துறையின் இணைச் செயலாளர் திரு. ஜார்ஜ் அலெக்ஸாண்டர் அவர்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று உள் (மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை) துறை குறித்த 6 குறிப்பாணைகளும் உள் (போக்குவரத்துத்) துறை குறித்த 1 குறிப்பாணையும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

துறையின் சார்பாக வருகை புரிந்துள்ள அலுவலர்களை குழுவின் முன் அழைக்கிறேன்.

The following Officers of the Home (Prohibition and Excise) Department were present:

1. Thiru R. Kirloshkumar, I.A.S.
   Commissioner,
   Home, Prohibition and Excise Department
   Chennai-5.
2. Thiru C. Tamilarasan,
   Deputy Secretary,
   Home (Prohibition and Excise) Department
   Chennai-9

The Committee took up for consideration the following Momoranda:

MEMORANDUM NO. 10 / 2018 - 2019

Sub: Amendments to the Tamil Nadu Liquor Retail Vending (in Shops and Bars) Rules, 2003.

The Deputy Secretary stated that in exercise of the powers conferred by Sections 17-C, 17-D, 21 and 22-D read with Section 54 of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937), the Government issued amendments to the Tamil Nadu Liquor Retail Vending (in Shops and Bars) Rules, 2003.

(G.O. Ms. No.20, Home, Prohibition and Excise (VI) Department, dated 29.3.2013)

No modification was recommended.

(G.O. Ms. No.18, Home, Prohibition and Excise (VI) Department, dated 29.3.2013)

Amendment to Rule 2 (oo) of the Tamil Nadu Liquor Retail Vending (in Shops and Bars) Rules, 2003 for defining retail profit margin.

In view of proposal for increase in ceiling of the rate of Excise Duty due to which the potential surplus of TASMAC Ltd. will be considerably reduced and that therefore, in order to keep the maximum retail price unchanged, it has been proposed to revise the retail profit margin of TASMAC Ltd from 10% to 0.05%. Accordingly an amendment to rule 2 (oo) of the said rules has been made by the Government.

DEPUTY SECRETARY, ASSEMBLY: Committee would like to know, whether there has been a considerable increase in the revenue after insertion of this clause.

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை துறை: தற்போது ரூ.300 கோடியிலிருந்து ரூ.350 கோடிக்கு அரசுக்கு வருவாய் வந்திருக்கிறது. இந்த Clause-ஐ முறைப்படுத்துவதற்கு Board ஆனது terms and conditions-ஐ decide செய்து ஆணையருக்கு ஒப்புதலுக்காக வைக்கிறது. ஒப்புதலுக்குப் பின்னரே Rule-ல் amendment கொண்டுவரப்பட்டது. 2016–2017 ஆம் நிதியாண்டில் வருவாய் ரூ.478 கோடியாக

உயர்ந்திருக்கிறது. Board-க்கு power கொடுத்ததால் எப்போதெல்லாம் தேவை ஏற்படுகிறதோ சூழ்நிலைக்கேற்றவாறு அந்தந்த சமயங்களில் amendment கொண்டுவரப்பட்டதால் number of bars increase ஆக்கப்பட்டு அரசுக்கு வருவாயும் உயர்ந்திருக்கிறது என்பதைக் குழுவிற்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

DEPUTY SECRETARY, ASSEMBLY: Sir, are you following the Tender Procedures as per the Tamil Nadu Transparency in Tenders Act, 1998?

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை துறை: டெண்டர் விதிகளை முழுமையாக follow செய்கிறோம்.

திரு. மு. திராவிடமணி: What type of amendment is this? Whether it is Administration or adjudication? What is the mode of tender made?

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை துறை: The Tamil Nadu Transparency in Tenders Act, 1998-ன்படி முறையாக நாளிதழில் விளம்பரம் கொடுத்து அறிவிக்கை செய்தபிறகு அதற்கென உள்ள தனி விதிகளைப் பின்பற்றி டெண்டர் பணிகளை மேற்கொண்டு வருகிறோம்.

திரு. மு. திராவிடமணி: P.W.D., Highways போன்றவைகளில் follow செய்வதுபோல civil contract டெண்டர் நடைமுறைகளை follow செய்கிறீர்களா அல்லது வேறு மாதிரியான டெண்டர் நடைமுறையா?

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை துறை: அதே விதியைத்தான் கடைப்பிடிக்கிறோம். மற்ற துறைகளில் எப்படி tender invite செய்யும்போது என்ன rules follow செய்கிறார்களோ அதே நடைமுறைகளைப் பின்பற்றி செய்கிறோம்.

THIRU T. MANO THANGARAJ: What is the total number of bars running in Tamil Nadu?

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை துறை: மொத்தம் 4,972 கடைகளும் 1,922 Bar-களும் உள்ளன.

திரு. த. மனோ தங்கராஜ்: கடைகளுக்கு ஈடாக Bar–கள் இல்லாததற்கு என்ன காரணம்?

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை துறை: நாங்கள் repeated ஆக டெண்டர் போட்டுக்கொண்டேதான் இருக்கிறோம். எல்லா கடைக்கும் டெண்டர் போவதில்லை. அதில் உள்ள condition என்னவென்றால் மதுக்கூடங்கள் மதுக் கடைகளோடு இணைந்து இருக்க வேண்டும். அந்த மாதிரியான provisions நிறைய இடங்களில் இல்லை. பக்கத்தில் வேறு ஏதாவது ஒரு கடை இருந்தால் விதிப்படி Bar-க்கு டெண்டர் கொடுக்க முடியாது. Through out the year, concerned District Managers tender call for செய்துகொண்டேதான் இருப்பார்கள். Illegal Bar-களைத் தொடர்ந்து drive செய்துகொண்டுதான் இருக்கிறோம்; Illegal bar-கள் நடக்காமல் பார்த்துக்கொள்கிறோம்.

திரு. த. மனோ தங்கராஜ்: Bar-களை டெண்டர் விடும்போது maximum போகும் தொகை எவ்வளவு? Minimum போகும் தொகை எவ்வளவு?

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை: நாங்கள் minimum upset price-ஐ fix செய்கிறோம். நகராட்சி மற்றும் மாநகராட்சியில் உள்ள கடைகளுக்கு 2.4% என்று நிர்ணயித்திருக்கிறோம். கடையில் என்ன விற்பனை ஆகின்றதோ அந்த விற்பனையில் 2.4% கட்ட வேண்டும். Town Panchayat-களில் 2.1% என்று நிர்ணயித்திருக்கிறோம். அதை மதுக்கூட உரிமையாளர்கள் கட்ட வேண்டும்.

திரு. மு. திராவிடமணி: Village panchayat–களில் எவ்வளவு கட்ட வேண்டும்?

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை: கிராமப் பஞ்சாயத்துகளில் 2.1% கட்ட வேண்டும். அதிலே தற்போது ஒரு amendment கொண்டு வந்திருக்கிறோம். 3 முறை டெண்டர் அழைத்து அந்த மதுக்கூடத்தை யாரும் எடுக்க முன்வரவில்லை என்றால் அதை 1.5% ஆகக் குறைத்து கொடுக்கிறோம்.

திரு. த. மனோ தங்கராஜ்: ஒரு கடையில் ரூ.1 இலட்சத்திற்கு விற்பனை ஆகிறது என்றால் 1% யாருக்குக் கட்ட வேண்டும்?

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை துறை: ரூ.1 இலட்சம் விற்பனை என்றால் 2.4 சதவிகிதத் தொகை அதாவது ரூ.2,400–ஐ 95% straightaway Government account-ல் DD எடுத்து கட்ட வேண்டும். 1% தொகையான ரூ.24 மட்டும் TASMAC பெயரில் கட்ட வேண்டும்.

திரு. த. மனோ தங்கராஜ்: ஒரு சதவிகிதம்தான் TASMAC–க்குத் தர வேண்டிய தொகையா? டெண்டர் குறித்துக் கூறினீர்களே, அது என்ன?

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை: மதுபானக் கடைகளுடன்கூடிய மதுக்கூடங்களும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தால் நடத்தப்படுகின்றன. மதுக்கூடம் நடத்துவதற்கான சிறப்புரிமையினை தனியார்களுக்கு ஒப்பந்தப்புள்ளிமூலம் வழங்கலாம் என முடிவு செய்யப்பட்டது. TASMAC வசூலிக்கும் ஒப்பந்தப்புள்ளித் தொகையில் 99 சதவிகிதத்தை அரசுக்கு செலுத்தி எஞ்சிய 1 சதவிகிதத்தை முகவர் கட்டணமாக நிறுத்தி வைத்துக்கொள்ளும்.

துணைச் செயலாளர், சட்டமன்றம்: Private party–க்கு மதுக்கூடத்தை நடத்துவதற்கான உரிமையைக் கொடுக்கும்போது மட்டும்தான் ஒப்பந்தப்புள்ளி கோருகிறீர்களா?

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை: தனியாருக்கு மதுக்கூடம் நடத்தும் உரிமையை கொடுக்கும்போதுமட்டும் ஒப்பந்தப்புள்ளி கோருகிறோம். Minimum upset price fix செய்து Open tender மூலம் நடத்துகிறோம். மாநகராட்சி மற்றும் நகராட்சிகளைப் பொறுத்தவரையில் 2.4 சதவிகிதத்திற்குக் கீழே யாரும் bid செய்ய முடியாது. Open tender–ல் கலந்துகொண்டு 2.4 சதவிகிதத்திற்கு மேல் எவ்வளவு வேண்டுமானாலும் ஏலம் கேட்கலாம்.

திரு. ஒய். பிரகாஷ்: 2.4 சதவிகிகத்திற்குக்கீழ் bid செய்ய விடமாட்டீர்களா?

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை: 2.4 சதவிகிகத்திற்குக்கீழ் bid செய்தால் அதனை நிராகரித்துவிடுவோம்.

திரு. த. மனோ தங்கராஜ்: கிராமப் பகுதிகளுக்கு minimum upset price எவ்வளவு fix செய்கிறீர்கள்?

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை: கிராமங்களுக்கு 2.1 சதவிகிதம் என நிர்ணயம் செய்கிறோம். ஆனால் 3 தடவை ஒப்பந்தப்புள்ளி கோரி யாரும் response கொடுக்கவில்லையென்றால் அதை 1.5 சதவிகிதமாகக் குறைக்கலாம் என்று தற்போது Board–ல் decision எடுத்திருக்கிறோம். இது ஊரகப் பகுதிகளுக்கு மட்டும்தான்.

திரு. செ. ராஜேஷ் குமார்: ஊரகப் பகுதிகளுக்கென்றால் Town Panchyat-களுக்கும் இதுபோல 1.5 சதவிகிதம் என குறைக்க வாய்ப்புள்ளதா?

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை: இல்லை. இது Village Panchayat-களுக்கு மட்டும்தான்.

DEPUTY SECRETARY, ASSEMBLY: In order to keep the maximum retail price unchanged, the retail profit margin of TASMAC Ltd. has been revised from 10% to 0.05%. Why there has been steep decrease of 9.05%?

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை: 2013 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து நடைமுறைப்படுத்தும் வகையில் Income Tax Act-ல் ஒரு சட்டதிருத்தம் கொண்டுவந்துள்ளார்கள். மாநில அரசு நிறுவனங்கள் அரசுக்கு License fees, Privilege fees, Vend fees போன்றவற்றை செலுத்தும்போது அந்த செலவினத்தை disallow செய்து அந்த expenditure–க்கு income tax கட்ட வேண்டுமென்று Income Tax Act-ல் amendment கொண்டுவந்துள்ளார்கள். முன்பு மார்ச் மாதத்தில் முடிவடைந்த நிதியாண்டிற்கு TASMAC–க்கு எவ்வளவு லாபம் வருகிறதோ அதற்கேற்றவாறு அரசுக்கு Additional vend fee / Vend fee போன்றவற்றை செலுத்தி அதன் லாபத்தை குறைத்துவிடுவார்கள். ஏனெனில் profit–க்கும் சேர்த்து Income tax கட்டக் கூடாது என்பதற்காக இவ்வாறு செய்தார்கள். இதனைத் தடுப்பதற்காக Income Tax Department–ல் amendment கொண்டுவந்துள்ளார்கள். இந்த Income Tax Act-ன்படி மாநில அரசுக்கு payment செய்தால் அதனை disallow செய்து அந்தத் தொகைக்கு Income tax கட்ட வேண்டும் என்று திருத்தம் கொண்டுவந்துள்ளார்கள். இதன்பொருட்டு மாநில அரசுக்கு ஏற்படும் நிதியிழப்பை தடுக்கும்பொருட்டு TASMAC–ன் profit margin மற்றும் அரசுக்கு செலுத்த வேண்டிய licence fee ஆகியவற்றைக் குறைத்து proportionate ஆக excise duty மற்றும் VAT–ஐ அதிகரித்து, 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இந்த அரசாணைகள் அனைத்தும் வெளியிடப்பட்டன.

துணைச் செயலாளர், சட்டமன்றம்: Income Tax–ஐ குறைக்கும் நோக்கத்தோடு TASMAC–ன் Retail profit margin குறைக்கப்பட்டதா?

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை: ஆமாம்.

திரு. த. மனோ தங்கராஜ்: The Government is giving permission either to run the shop or to run the shop along with bar. ஒரு கடையோ அல்லது பாரோ திறக்கும்போது இவ்வளவு இடம் இருக்க வேண்டும் என்று கொண்டுவரவேண்டும். இடநெருக்கடியான இடங்களில் கடைகளைத் திறப்பதால் தொல்லைகள் ஏற்படுகின்றன. IMFL Rule படி "Bar should be with outlet" என்று இருந்தால் conflict வராது. இதனை அரசு ஒரு கொள்கையாகக் கொண்டு செயல்படுத்த வேண்டும்.

அரசு துணைச் செயலாளர், உள் (மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்) துறை: இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கிறோம்.

திரு. மு. திராவிடமணி: மதுக்கடைகளை திறக்கக்கூடாது என்று கூறப்பட்டிருக்கும் சில இடங்களில் illegal ஆக திறந்து விற்பனை செய்கிறார்கள்.

திரு. ஒ.கே. சின்னராஜ்: நெருக்கமான இடங்களில் மதுக்கடைகளை திறக்கக்கூடாது என்று சொன்ன பிறகு நிறைய கடைகள் மூடப்பட்டுவிட்டன.

திரு. செ. ராஜேஷ் குமார்: உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி ஊரகப் பகுதிகள் மற்றும் Town panchayat–களில் மதுக்கடைகள் எத்தனை மீட்டர் தொலைவில் இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது?

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை: உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி உள்ளாட்சிகளில் இருபதாயிரத்திற்கும் குறைவாக மக்கள்தொகை இருந்தால் 220 மீட்டர் தொலைவில்தான் மதுக்கடை வைக்கவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

திரு. செ. ராஜேஷ் குமார்: Town panchayat–களில் எத்தனை மீட்டர் தொலைவில் இருக்க வேண்டும்.

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை: உள்ளாட்சிப் பகுதிகளாக இருந்தாலும் Town panchayat ஆக இருந்தாலும் இருபதாயிரத்திற்கும் குறைவாக மக்கள்தொகை இருந்தால் 220 மீட்டர் தொலைவில் மதுக்கடை வைக்கவேண்டும், மக்கள்தொகை இருபதாயிரத்திற்கும் மேல் இருந்தால் 500 மீட்டர் தொலைவில் வைக்கவேண்டும்.

திரு. செ. ராஜேஷ் குமார்: உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி சில இடங்களில் உள்ள மதுக்கடைகளை மூடிவிட்டு மீண்டும் மக்கள்தொகை அதிகமுள்ள இடங்களில் அவற்றைத் திறக்கிறார்களே?

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை: Public objection இருக்கும் இடங்களில் உள்ள மதுக்கடைகளை மூடிவிடுகிறோம். உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி இதுவரை 3321 கடைகளை மூடி இருக்கிறோம்.

திரு. மு. திராவிடமணி: பந்தலூர், எம்.ஜி.ஆர். நகரில் 100 மீட்டர் இடைவெளியில் ஒரு பள்ளி இயங்கிக்கொண்டிருப்பதால் மதுக்கடையை மூடுமாறு மக்கள் கோரிக்கை வைத்த பிறகும் அது மூடப்படவில்லை.

துணைச் செயலாளர், சட்டமன்றம்: உறுப்பினர் குறிப்பிட்ட இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு கேட்டுக்கொள்கிறது.

அரசு துணைச் செயலாளர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை: இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கிறோம்.

திரு. த. மனோ தங்கராஜ்: எங்கள் மாவட்ட மேலாளர், அரசாங்கம் நிர்ணயம் செய்த target achieve செய்யாமல் நான் சென்னை போக முடியாது என்று சொல்கிறார். யாரும் வேண்டுமென்று தடுப்பது இல்லை. Only where there is an objection. இதிலே விதிகள் சரியாக பின்பற்றப்படுவது இல்லை. ஒரு கடையில் bar இருக்கிறது. பக்கத்து கடையில் bar இல்லை. இதில் common understanding இருக்கிறது. Bar-ல் குடித்துவிட்டு ப்ளாஸ்டிக் டம்ளர்களை அங்கேயே போட்டுவிட்டுப் போகிறார்கள். இந்த culture மாற வேண்டும். working class, lower middle class are the maximum customers to TASMAC. Health-க்கும் safety இல்லை. Government should take a policy decision on this issue.

(G.O. Ms. No.19, Home, Prohibition and Excise (VI) Department, dated 29.3.2013)

In the said Rules, for Rule 7, the following has been substituted, namely:

7. Renewal of licence: The licence issued to the Corporation under rule 4 is renewable by the Commissioner of Prohibition and Excise on payment of annual privilege fee of Rs.1,00,000/- (Rupees one lakh only), licence fee of Rs.1,000/- (Rupees one thousand only) and application fee of Rs.100/- (Rupees one hundred only) on or before the 28th November.

The Committee observed that according to the amended rule 7; sub-rule (2) of rule 3 may be suitably amended for processing application for the grant of licence.

(G.O. Ms. No.75, Home, Prohibition and Excise (VI) Department, dated 16.12.2013)

The amendment made to the Rule 7 shall be deemed to have come into force on the 29th March, 2013.

In the said Rules, for Rule 7, the following has been substituted, namely:

7. Renewal of licence: The licence issued to the Corporation under rule 4 is renewable by the Commissioner of Prohibition and Excise on payment of annual privilege fee of Rs.1,00,000/- (Rupees one lakh only), licence fee of Rs.1,000/- (Rupees one thousand only) and application fee of Rs.100/- (Rupees one hundred only) on or before the 28th November.

The Committee observed that the date of commencement of the amended Rule 7 shall be from the date of publication of Gazette notification. The necessity of issuing another notification for giving effective date has not been explained and retrospective effect has been given to the amendment.

The Committee also observed that except fourth notification all the other three notifications were placed with a delay of two years and four months in placing on the Table of the House, after its publication Government Gazette Extraordinary dated 17.4.2013.

DEPUTY SECRETARY: What is the significance of this G.O.

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை: Licence period of TASMAC நவம்பர் 28-லிருந்து அடுத்த வருடம் நவம்பர் 27 வரையிலும் வருகிறது. இந்த amendment 29 மார்ச், 2013 அன்று கொடுத்துவிட்டார்கள். டாஸ்மாக் ஆடிட்டர்கள் effective date இல்லை என்ற ஒரு கேள்வியை எழுப்பினார்கள். Effective Date இல்லாதபோது டாஸ்மாக் ஏற்கெனவே கட்டிய தொகையை திரும்பப் பெற முடியாது எனவே அதைத் தெளிவாக அரசாணையில் குறிப்பிட வேண்டும் என்று சொன்ன காரணத்தால் அதை base செய்து ஒரு அரசாணையை வெளியிடுகிறார்கள். அந்த இரண்டு அரசாணைக்கும் பெரிய வித்தியாசம் ஒன்றும் இல்லை ஒரே ஒரு வரிதான் சேர்த்திருக்கிறார்கள். இந்த amendment 29 மார்ச், 2013–லிருந்து பொருந்தும்.

அரசு இணைச் செயலாளர், சட்டத் துறை: அரசாணை வெளியிடப்பட்டது 29-3-2013, ஆனால் Government Gazette-ல் publish செய்தது later date-ல் அதாவது **17–4–2013–ல்தான்** வெளியிடப்பட்டிருக்கிறது. அரசாணையானது என்றைக்கு அரசிதழில் வெளியிடப்படுகிறதோ அன்றையிலிருந்துதான் அது நடைமுறைக்கு வரும். ஆதலால், **29–3–2013–**லிருந்து செயல்படுத்துவதற்கு ஏதுவாக retrospective effect கொடுங்கள் என்று கேட்டார்கள் அதனால் இன்னொரு amendment போடப்பட்டது.

திரு. மு. திராவிடமணி: சம்பளம் அல்லது வேறு படி ஏதாவது கொடுக்கவேண்டும் என்றால் retrospective effect கொடுக்கலாம். இதற்கு எப்படி கொடுக்க முடியும்? This is called Skeletal Legislation. Administration-க்கு ஏற்ற மாதிரி rule-ஐ frame செய்துகொள்வது. இது வணிக ரீதியாக ஏற்கெனவே நடந்து முடிந்திருக்கும் அதற்கு retrospective effect கொடுக்கக் கூடாது. It is against the parent act. வணிகரீதியாக சட்டம் இயற்றும்போது day to day நடக்க வேண்டும். அப்போதுதான் control செய்ய முடியும்.

துணைச் செயலாளர், சட்டமன்றம்: முதல் அரசாணையிலேயே retrospective effect கொடுத்து போட்டிருக்க வேண்டும். இனிவருங்காலங்களில் ஒரே தேதியில் வருமாறு பார்த்துக்கொள்ளுங்கள்.

Renewal of licence ரூ.500 கோடியிலிருந்து ரூ.1 இலட்சமாக மாற்றியிருக்கிறீர்கள்.

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை: Income Tax Act-ல் சட்டத் திருத்தம் கொண்டு வந்தார்கள். அதில் ஒரு மாநிலத்திற்கு licence fee or royalty or any amount of Income Tax கட்டும்போது அந்தத் தொகையை disallow செய்துவிட்டு 35% tax கட்ட வேண்டும் என்று சட்டத் திருத்தம் கொண்டுவந்தார்கள். Retail vending, 500 கோடியிலிருந்து 1 இலட்சம் ஆகக் குறைத்தது எல்லாம் வருமான வரி விதிகளுக்கேற்ப மாநில அரசுக்கு நிதியிழப்பு ஏற்படக் கூடாது என்ற நிகழ்வை ஒட்டி amendment கொண்டு வந்தோம். இதோடு சேர்த்து Excise duty மற்றும் VAT ஆகியவற்றை அதிகப்படுத்திவிட்டோம். இதனால் மாநில அரசுக்கு வருவாய் அதிகம் ஆனது.

திரு. மு. திராவிடமணி: இது எப்படி assessable income ஆகும்?

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை: Income Tax return file செய்யும்போது அரசுக்கு செலுத்த வேண்டிய தொகையை disallow செய்துவிட்டு அதற்கெல்லாம் வரி கட்டுவதுபோல மத்திய அரசு, வருமான வரியில் ஒரு amendment கொண்டுவந்தார்கள்.

திரு. மு. திராவிடமணி: டாஸ்மாக் உற்பத்தியில் வருகிறதா? விற்பனையில் வருகிறதா?

ஆணையர், உள் மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை: விற்பனையில் வருகிறது.

திரு. மு. திராவிடமணி: விற்பனையில் எப்படி வரும்? உற்பத்தியில்தானே வரும். Value added-ல் தானே வரும். சர்க்கரையை சாராயமாக வடிக்கிறோம், அதற்கு மதிப்புக் கூட்டுகிறோம் இல்லையா அதனால் உற்பத்திதான்.

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை: வருமான வரித் துறையின் II schedule-ல் இது கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன்படி, மதுபான ஆலைகளிடமிருந்து டாஸ்மாக் வாங்கும்போது 100 ரூபாய் பொருள் என்றால் அதில் 58% add செய்து 158 ரூபாய்க்கு வாங்குகிறார்கள். There is no value addition it comes under sales.

திரு. த. மனோ தங்கராஜ்: ஒரு பொருளை வேறு பொருளாக மாற்றும்போதுதான் மதிப்புக் கூட்டு வரி போடுகிறோம். உற்பத்தியாளரிடமிருந்து வாங்குகிறோம் உதாரணமாக எம்.எல்.ஏ. மேம்பாட்டு நிதியில் ஒரு வேலை செய்தால் 1 இலட்சம் ரூபாய்க்கு 12% GST பிடிக்கிறார்கள். ஒரு Contractor ஜல்லி வாங்கும்போது அங்கேயும் வரி கட்டுகிறார். ஆகவே, duplication of tax ஆகிறது. Single entry tax தான் வர வேண்டும். Multiple tax வரக்கூடாது. Manufacturing tax–க்குப் பிறகு Sales tax வசூலிக்கலாம், திரும்ப VAT போடுவது தவறு.

திரு. மு. திராவிடமணி: உற்பத்தியாளர்கள் Manufacturing tax செலுத்துகிறார்கள். விற்பனையாளர்கள் Sales tax மட்டும் தான் செலுத்த வேண்டும். Double tax வரக்கூடாது என்பது என்னுடைய கருத்து.

அரசு இணைச் செயலாளர், சட்டத் துறை: GST–ல் வந்தால் single entry tax மட்டும் கட்டினால் போதுமானது. GST–ல் வராத காரணத்தால் double tax செலுத்த வேண்டியுள்ளது.

திரு. மு. திராவிடமணி: இதில் மதிப்புக் கூட்டுவது எதுவும் இல்லாத போது Value Added Tax எதற்காக வசூலிக்கிறார்கள்.

அரசு இணைச் செயலாளர், சட்டத் துறை: Production–லிருந்து Sales வரைக்கும் ஒவ்வொரு stage–லும் VAT வசூலிக்கப்படுகிறது.

திரு. மு. திராவிடமணி: சட்டமியற்றுவதில் சட்டமன்றம் skeleton / frame போல் செயல்படுகிறது. சம்பந்தப்பட்ட Administrative Department தான் இதனை முழுமை செய்து செயல்படுத்தவேண்டும்.

திரு. ஒய். பிரகாஷ்: TASMAC–ல் ஒவ்வொரு பொருளையும் bill போட்டு வாங்கும்போது, sales ஆகும்போது மட்டும் ஏன் bill கொடுப்பதில்லை? கேரளா, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் தருவது போல் நமது மாநிலத்திலும் bill கொடுக்க வேண்டும். ஆனால், எந்த மதுக்கடையிலும் bill கொடுப்பதில்லை.

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை: Electronic billing machine–ஐ 2500 கடைகளுக்கு வழங்கியிருக்கிறோம். சென்னையில் உள்ள கடைகளுக்கு அடுத்த மாதம் Card swiping machine / Point on Sale Machine கொடுக்கவிருக்கிறோம். மாலை 6 மணி முதல் 10 மணி வரை peak time ஆகையால் sales pressure அதிகமாக இருக்கும். Billing machine வேண்டும் என்று கேட்பவர்களுக்கு கொடுக்கிறோம்.

திரு. ஒய். பிரகாஷ்: அனைத்து மதுக்கடைகளுக்கும் கண்டிப்பாக Billing machine வழங்க வேண்டும். Bill இல்லாத காரணத்தால் சில மதுக்கடைகளில் அதிகமான தொகையை வாங்குகிறார்கள். கிராமத்திலிருப்பவர்களுக்கு இதன் விலை குறித்து தெரியாது என்பதால் அவர்கள் கேட்பதைக் கொடுத்துவிடுகிறார்கள். Bill கொடுத்தால் பொருளின் சரியான விலையை அறிந்துகொள்ளலாம்.

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை: அனைத்து மதுக்கடைகளிலும் bill கொடுக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கிறோம்.

திரு. த. மனோ தங்கராஜ்: 2006 ஆம் ஆண்டு இதுபோன்ற பிரச்சினை எங்கள் மாவட்டத்திற்கு வந்தபோது இதனை சமாளிக்க price board வைக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. எனவே பொருட்களின் விலையை ஒரு காகிதத்தில் எழுதி கடையின் அருகில் ஒட்டிவிட்டார்கள். ஆனால் அந்த எழுத்துக்கள் சிறிய எழுத்துக்களாக இருந்த காரணத்தால் படிக்க இயலவில்லை. தெளிவாக படிக்கக்கூடிய வகையிலும், பெரிய எழுத்துக்களில் கண்ணுக்கு தெரியும் வகையிலும் பொருட்களின் விலைப்பட்டியல் வைக்கப்பட வேண்டும். ரசீது கொடுக்கப்பட்டால் மிகவும் நல்லது.

திரு. மு. திராவிடமணி: இதில் நிறைய practical problems இருந்தாலும் price list வைத்துவிட்டால் ஏமாற்றுபவர்களை நிறுத்திவிடலாம். ரசீது கொடுக்க இயலவில்லையெனில் தெளிவாக தெரியும்படி price list வைத்துவிடலாம்.

திரு. த. மனோ தங்கராஜ்: இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முதலாவதாக, விலை தெளிவாக தெரியும்படி விலைப்பட்டியலை கடையில் ஒட்டி வைக்கவேண்டும். இரண்டாவதாக, மதுக்கடையில் அதிக விலை கேட்டால் யாரிடம் புகார் தெரிவிப்பது என்ற விவரத்தையும் அதில் குறிப்பிட வேண்டும்.

தலைவர்: இதனைக் குறித்து வைத்துக்கொள்ளுங்கள். உரிய நடவடிக்கையினை துறைமூலம் எடுக்க வேண்டும்.

அரசு துணைச் செயலாளர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை: இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கிறோம்.

The Committee recommends that according to the amended rule 7; sub-rule (2) of rule 3 may be suitably amended for processing application for the grant of licence.

The Committee also recommends that the date of commencement of the amended Rule shall be made in the Notification itself rather than issuing another Notification for giving effect to retrospective date.

The Committee recommends for price list of the liquor available in the shop along with the name, designation with contact number of the person for making complaint, if any may be displaced.

MEMORANDUM NO. 11 / 2018 - 2019

Sub: Amendments to the Tamil Nadu Liquor (Licence and Permit) Rules, 1981

The Deputy Secretary stated that in exercise of the powers conferred by Sections 17-C, 17-D, 17-E, 18-B, 18-C, 20 and 21 read with Section 54 of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937), the Government issued amendments to the Tamil Nadu Liquor (Licence and Permit) Rules, 1981.

(G.O. Ms. No.1, Home, Prohibition and Excise (VIII) Department, dated 2.1.2014)

The Committee observed that there was a delay of more than 8 months in placing the above Notification on the Table of the House.

DEPUTY SECRETARY, ASSEMBLY: According to this G.O., in respect of FL2 and FL3 licences, application fee has been increased from Rs.1,000/- to Rs.3,000/- and licence fee has been enhanced from Rs.5,000/- to Rs.10,000/- in Five Star Hotels. அதே போல் Privilege fee-ஐ ரூபாய் 15 இலட்சமாக உயர்த்தியிருக்கலாம் இல்லையா?

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை: இதனை ஏற்கெனவே உயர்த்தியிருக்கிறோம். Single Star hotel-களில் Privilege fee-ஐ ரூ.2,000/-லிருந்து ரூ.3,000/- ஆகவும், Double Star hotel-களில் ரூ.3,000/-லிருந்து ரூ.4,500/- ஆகவும், Three Star hotel-களில் ரூ.4,000/-லிருந்து ரூ.6,000/- ஆகவும், Four Star hotel-களில் ரூ.6,000/-லிருந்து ரூ.9,000/- ஆகவும், Five Star hotel-களில் ரூ.8,000/-லிருந்து ரூ.16,000/- ஆகவும் உயர்த்தியிருக்கிறோம். Five Star hotel-களைப் பொறுத்தவரையில் Privilege fee-ஐ இருமடங்காக உயர்த்தியுள்ளோம்.

திரு. த. மனோ தங்கராஜ்: கேரள எல்லைப் பகுதியில் சாலையின் ஒருபக்கம் தமிழ்நாட்டு எல்லைக்குள் உள்ள மதுக்கடையில் உள்ள மதுவின் தரமும் சாலையின் மறுபக்கம் கேரள எல்லைக்குள் உள்ள மதுக்கடையில் உள்ள மதுவின் தரமும் வேறுபடுகின்றன. விலை குறைவாக இருந்தாலும் கேரளாவில் விற்கப்படும் மது தரமாக உள்ளது. அதே போல் கர்நாடகா மற்றும் பாண்டிச்சேரியில் உள்ள கடைகளில் விற்கப்படும் மதுவும் தரமானதாக உள்ளன. In Tamil Nadu spirit is being mixed and not distilled.

திரு. ஒய். பிரகாஷ்: தமிழ்நாட்டில் மதுவின் தரத்தை மேம்படுத்த வேண்டும்.

திரு. த. மனோ தங்கராஜ்: Distillation process என்பது வேறு, Mixing என்பது வேறு. தமிழ்நாட்டில் Ethanol உடன் சில குறிப்பிட்ட சதவிகிதத்தில் ரசாயனங்களை கலந்து கொடுக்கிறார்கள். ஆனால் கேரளாவில் மதுவினை Distillation process–ல் செய்கிறார்கள். கேரள மாநிலம், கர்நாடக மாநிலம், பாண்டிச்சேரி யூனியன் பிரதேசம் மற்றும் இராணுவம் ஆகியவற்றில் வழங்கப்படும் மதுவின் தரத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது அதன் தரத்தில் தமிழ்நாடு மாநிலத்தில் வழங்கப்படும் மதுவின் தரம் 25 சதவிகிதம் மட்டுமே உள்ளது.

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை: மதுவின் தரத்தை ஆய்வு செய்யும் பொருட்டு Checks and balances வைத்திருக்கிறோம். மதுபான ஆலைக்கு லாரிகளில் spirit வரும்போது அவற்றை download செய்வதற்கு முன்பே sample எடுத்து Forensic Science Laboratory–க்கு அனுப்பி வைக்கிறோம். Forensic Science Laboratory–யிலிருந்து உறுதி செய்யப்பட்டபின் லாரியிலிருந்து spirit–ஐ download செய்கிறோம். Once liquor is manufactured, ஒவ்வொரு batch-க்கும் ஒரு நம்பர் கொடுக்கிறார்கள். ஒவ்வொரு பேட்சில் இருப்பதை மறுபடியும் forensic science lab-க்கு அனுப்புகிறோம். அங்கு excise division தனியாக இருக்கிறது. அங்கிருந்து report வந்தபிறகுதான் bottling–க்கு permission கொடுக்கிறோம். Raw materials stage–லும் finished product stage–லும் நிறைய checks and balances உள்ளன. சென்ற வருடம் beer ஏற்றுமதிக்கு நிறைய permission கொடுத்திருக்கிறோம். ஏனென்றால் நிறைய பீர் ஆலைகள் இங்கு இருக்கின்றன. பீர் விற்பனை தமிழ்நாட்டில் குறைந்த அளவுக்கே விற்பனை ஆகின்றபடியால் இப்போது அதிகபட்சமான பீர்களை கேரள மாநிலத்திற்கு, ஆந்திர மாநிலத்திற்கும் அனுப்பிக்கொண்டிருக்கிறோம்.

திரு. த. மனோ தங்கராஜ்: மற்ற மாநிலங்களுக்கு அனுப்பும் மதுபானங்களின் தரத்தைவிட 100% நம் தமிழ்நாட்டில் விற்பனை செய்யப்படும் மதுபானங்கள் மிகவும் தரமற்றவையாக உள்ளன. They are preparing the bottles one for Tamil Nadu and other for States like Kerala. Same company but different quality. I am not blaming the Government. You please make a visit to other States and see the difference. You please check the quality which is available in Tamil Nadu. எங்கள் பகுதி கேரளா எல்லையில் அமைந்துள்ளது. கேரள பகுதியில் இருப்பவர்கள் steady ஆக இருக்கிறார்கள்; நன்றாக இருக்கிறார்கள்.

திரு. வே.பொ. சிவசுப்பிரமணி: அதை அவர்கள் எப்படி எடுத்துக்கொள்கிறார்கள் என்ற முறையிலும் இருக்கிறது. இங்கு மடக்கென்று 10 நிமிடங்களில் குடித்துவிட்டு போய்விடுகிறார்கள். அதனாலும்கூட அந்த மாதிரி ஒரு நிலை ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

திரு. த. மனோ தங்கராஜ்: தயவுசெய்து quality–யை கொஞ்சம் improve செய்யுங்கள். அதுபோல FL II–ல் எங்கள் ஊரில் நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன. எங்கள் ஊரில் இருக்கும் limited number of members உள்ள club. But they are settling liquor for unlimited numbers. FLII என்பது open Bar மாதிரி நடக்கிறது. டாஸ்மாக்

கடையை உள்ளூரில் இருக்கும் ஆட்களைக் கொண்டு protest செய்வதே FLII licence வைத்திருப்பவர்தான். போட்டியாக இருக்கக்கூடாது என்ற காரணத்தால் உள்ளூர் அதிகாரிகளின் உதவியோடு அப்படி செய்து டாஸ்மாக் கடையை அடித்து நொறுக்கச் செய்கிறார்கள். ஒரு எம்.எல்.ஏ. டாஸ்மாக் கடையை மூடச் செய்வது மிகவும் கஷ்டமானது. எந்த இடத்தில் நடந்தது என்று நான் எழுதிகூட கொடுக்கிறேன். For the benefit of the FLII licence holder, they easily close the TASMAC shop. You make a surprise visit to our District to that particular spot, FLII is nothing other than a TASMAC bar and is selling for high end rate.

முன்பெல்லாம் FLII licence holder, இவ்வளவுதான் purchase செய்ய வேண்டும் என்று இருந்தது. இப்போது ஒரு நாளைக்கு இலட்சக்கணக்காக விற்பனை ஆகிறதே அது எப்படி? வெளியில் 100 ரூபாய் என்றால் அவர்கள் 200 ரூபாய்க்கு விற்கிறார்கள். ஒரு பிளாஸ்டிக் கப், தண்ணீர் பாக்கெட், கொஞ்சம் கடலை freeஆக கொடுக்கிறார்கள். Health club-தான் வைத்திருக்கிறார்கள். How can we allow the illogical sales for lakhs and lakhs of rupees.

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை: மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்து முக்கியமான கருத்து அதை ஏற்றுக்கொள்கிறேன். தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு rules follow செய்ய வேண்டுமென்று instructions கொடுக்கிறோம்.

திரு. த. மனோ தங்கராஜ்: கன்னியாகுமரி மாவட்டத்தில் FLII licence holders யாராவது rules–ஐ சரியாக follow செய்கிறார்களா என்று பாருங்கள். Please give proper instructions and take serious action.

திரு. வே.பொ. சிவசுப்பிரமணி: டாஸ்மாக்கில் பார்களில் பாட்டிலுக்கு பதிலாக pouch மாதிரி biodegradable cup கொடுக்கலாம். Paper boat வருவது போல கொடுக்கலாம். அதேபோல ஜனவரி 2019–லிருந்து பிளாஸ்டிக் தடை செய்யப்படுகிறது என்பதால் அதற்குப் பதிலாக வேறு மாற்று ஏற்பாடாக Frooti pack வருவது போல கொடுக்கலாம்.

திரு. Y. பிரகாஷ்: கர்நாடகாவில் உள்ள கடைகளில் அந்த மாதிரியான பேக்கெட்டுகளில்தான் கொடுக்கிறார்கள்.

திரு. மு. திராவிடமணி: பல விலங்குகள் பிளாஸ்டிக் பொருட்களை உட்கொள்வதால் இறக்கும் நிலை ஏற்படுகிறது.

திரு. த. மனோ தங்கராஜ்: பெரும்பாலும் water contamination ஏற்படுவதற்கு பிளாஸ்டிக் பொருட்களே காரணமாக அமைகின்றன.

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை: அதில் நிறைய கலப்படம் வருவதற்கு வாய்ப்பு இருப்பதால் கர்நாடகாவில் தடை செய்யப் போகிறார்கள். ஊட்டியில் tetra pack-ல் கொடுக்கிறார்கள். அதிலும் நிறைய illicit வர ஆரம்பித்துவிட்டது அதனால் அது சாத்தியமில்லை. பிளாஸ்டிக்கிற்குப் பதிலாக கண்ணாடி டம்ளர்களை உபயோகத்திற்குக் கொண்டு வரலாம் என்று ஆலோசித்துக்கொண்டிருக்கிறோம்.

No modification was recommended.

MEMORANDUM NO. 12 / 2018 - 2019

Sub: Amendments to the Tamil Nadu Liquor (Supply by Wholesale) Rules, 1983.

The Deputy Secretary stated that in exercise of the powers conferred by Section 54 read with Sections 17-C, 17-D, 17-E, 18-B, 18-BB, 18-C, 20 and 21 of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937), the Government issued amendments to the Tamil Nadu Liquor (Supply by Wholesale) Rules, 1983.

(G.O. Ms. No.17, Home, Prohibition and Excise (VIII) Department, dated 20.8.2014)

Rule 13 of the Tamil Nadu Liquor (Supply by wholesale) Rules, 1983 relates to the grant of Import permit licences.

Sub-rule (2) of rule 13 of the Tamil Nadu Liquor (Supply by Wholesale) Rules, 1983 has been amended.

According to the amended sub-rule, the import suppliers to the licensee shall pay special fee in the case of Indian-Made Foreign Spirits and foreign liquor imported at the rates specified in the table appended to the Notification.

The Committee may seek a clarification as to reasons for inclusion of a new column "Range of basic price" in the Table appended to the notification for the payment of Special Fee by the import suppliers to the licensee of Indian-Made Foreign Spirits and foreign liquor, Wine and Beer.

DEPUTY SECRETARY, ASSEMBLY: இதில் Range of basic price என்ற new column-ஐ table-ல் insert செய்திருக்கிறார்கள். இந்த புதிய column-ஐ ஏன் இடையில் புகுத்தினார்கள்? Range of basic price–ஐ எப்படி தீர்மானித்தார்கள்?

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை: Indian Made Foreign Spirit-ஐ Ordinary, Medium, Premium என்று மூன்று விதமாக பிரிக்கலாம். முதன்முதலில் 1992 ஆம் ஆண்டு இவ்வாறு மூன்று விதமாக பிரித்து Ordinary–க்கு Range of basic price upto Rs.300/- per case என்றும், Medium–க்கு Rs.301/- to Rs.378/- per case என்றும், Premium–க்கு more than Rs.378/- per case என்றும் determine செய்யப்பட்டது. பிறகு அவ்வப்போது Range of basic price படிப்படியாக உயர்த்திக்கொண்டே வரப்பட்டது. முதலில் 1992 ஆம் ஆண்டு அடிப்படை விலை அதிகரிக்கப்பட்டது; பிறகு 1993, 1994, 1997, 2001, 2004, 2007, 2014 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளில் அதிகரிக்கப்பட்டது. இவ்வாறு அடிப்படை விலையை அதிகரித்துக்கொண்டே வரும்போது இந்த அரசாணையின்படி Ordinary–க்கு Range of basic price upto Rs.478/- per case என்றும், Medium–க்கு Rs.479/- to Rs.547/- per case என்றும், Premium–க்கு Rs.548/- to Rs.1643/- per case என்றும் தீர்மானிக்கப்பட்டது.

துணைச் செயலாளர், சட்டமன்றம்: Indian Made Foreign Liquor–க்கும் Indian Made Foreign Spirit–க்கும் என்ன வித்தியாசம்?

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை: இதில் வித்தியாசம் ஏதுமில்லை. Prohibition Act, IMFS Rules–ல் Indian Made Foreign Liquor மற்றும் Indian Made Foreign Spirit–க்கான definition என்ன என்று கொடுக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட இரண்டு வகைகளும் ஒன்றுதான்.

திரு. த. மனோ தங்கராஜ்: இரண்டிற்கும் எந்த வித்தியாசமும் இல்லை என்றால் ஒரே வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கலாமே? எந்த complication–ம் இல்லாமல் இருக்க வேண்டும். இதில் Indian Made Foreign Liquor என்பது வெளிநாட்டு மதுவின் கலவையா?

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை: முதலில் 1980 ஆம் ஆண்டில் நாட்டு மது மற்றும் whisky, brandy போன்றவை இருந்தன. இவற்றை வேறுபடுத்திக் காட்டுவதற்காக நாட்டு மதுவை arrack என்றும், whisky, brandy போன்றவற்றை Indian Made Foreign Liquor என்றும் அழைத்தனர்.

திரு. வே.பொ. சிவசுப்பிரமணி: முன்பு arrack மற்றும் wine கடைகள் இருந்தன. Arrack என்பது உள்நாட்டு மதுபானம். Wine என்பது இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுபானம்.

திரு. த. மனோ தங்கராஜ்: ஆனால் தமிழ்நாட்டு மதுபானங்களின் தயாரிப்பில் சரியாக formula பின்பற்றப்படுவதில்லை; proportion சரியாக இல்லை; தரமும் இல்லை.

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை: Bureau of Indian Standards–ல் மதுபானம் தயாரிக்கும்போது Alcohol இவ்வளவு சதவிகிதம் இருக்க வேண்டும், Preservatives இவ்வளவு சதவிகிதத்திற்கு மேல் போகக் கூடாது, Ethyl Alcohol இவ்வளவு சதவிகிதம்தான் இருக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மதுபான ஆலையில் உள்ள Forensic Science Laboratory-ல் Bureau of Indian Standards படி மதுவின் தரம் இருந்தால் மட்டுமே சான்றிதழ் வழங்கப்படுகிறது.

திரு. த. மனோ தங்கராஜ்: Brewing process என்பது ஒரு பெரிய பாத்திரத்தில் Ethanol–ஐ போட்டு சில ரசாயனங்களைச் சேர்த்து, பிறகு சர்க்கரை மற்றும் Yeast சேர்த்து 21 நாட்கள் வைத்திருந்தால் அது முதிர்ந்து வரும். அதன் பிறகு அதனை distil செய்தால் அதற்குப் பெயர்தான் சாராயம். Molasses பயன்படுத்தி distillation process–க்கு உட்படுத்தி மதுபானம் தயாரிக்கப்படுகிறது. ஆனால் distillation process என்பது பெரிய process. Output நினைத்த அளவிற்கு வரும் என்பது உறுதி கிடையாது. தவறாகப் போய்விட்டால் 10 பாட்டில்களுக்குப் பதில் 5 பாட்டில்கள்தான் கிடைக்கும். ஆகவே, TASMAC–ல் சொல்லும் சதவிகிதப்படி Ethanol–ல் essence–ஐ போட்டுத் தருகிறார்கள். அதனால்தான் தமிழ்நாட்டு மதுபானத்தின் தரம் குறைவாக உள்ளது. இதில் Distillation process கிடையாது; Mixing process மட்டும் தான். Distillation process–ல் நாள் ஆக ஆக Alcoholic தன்மை கூடும்; Negative தன்மை குறையும். ஆனால் Mixing செய்யும்போது இந்தத் தன்மை வருவதில்லை.

திரு. வே.பொ. சிவசுப்பிரமணி: நான் 1984 ஆம் ஆண்டு Wine shop–ன் Licence Holder ஆக இருந்தபோது Golkonda–விற்கு Wine எப்படி தயாரிக்கப்படுகிறது என்பதைப் பார்வையிடச் சென்றிருந்தேன். ஆணையர் அவர்கள் தெரிவித்த formula படி தயாரித்து பாட்டில்களில் அடைத்து ஒரு bath–ல் உள்ள தண்ணீரில் மூன்று நாட்கள் அந்த பாட்டில்கள் roller–ல் roll ஆகும்படி செய்த பிறகு end product வருகிறது. ஆனால் தற்போது அந்த process படி செய்யாமல் நேரடியாக mixing செய்து பாட்டில்களில் அடைத்துவிடுகிறார்கள். அப்படி இல்லாமல் முறையான process படி மதுவை தயாரிக்க முயற்சி மேற்கொள்ள வேண்டும். கொடுக்கும் பொருளை மக்களுக்கு நல்லதாக கொடுக்க வேண்டும்.

திரு. த. மனோ தங்கராஜ்: Alcohol, தண்ணீர் ஆகியவற்றை சரியான விகிதத்தில் சேர்த்து சரியான process படி மதுவினை தயாரிக்க வேண்டும். ஆனால் தமிழ்நாட்டில் Distillation process செய்வதில்லை.

துணைச் செயலாளர், சட்டமன்றம்: சென்னை அல்லது சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள ஏதேனும் ஒரு மது ஆலையில் குழு ஆய்வு செய்ய ஏற்பாடு செய்யலாம்.

திரு. மு. திராவிடமணி: Expert Committee போட்டு எப்படி manufacture செய்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். முறையாக manufacture செய்யப்பட வேண்டும். இதில் பணத்தை அள்ளிக் குவிக்கிறார்கள். நாம்தான் இதை முறைப்படுத்தி சரி செய்ய வேண்டும். இதில் யார் beneficiary என்றால் distilleries வைத்திருப்பவர்கள்தான். எந்த basis–ல் rate fix செய்கிறீர்கள்?

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை துறை: உதாரணமாக 100 ரூபாய் பாட்டில் வாங்கினால் அதில் 14 ரூபாய் உற்பத்தியாளருக்கு போகிறது. டாஸ்மாக்குக்கு 1 ரூபாய்தான் வருகிறது. 85 ரூபாய் அரசாங்கத்திற்குப் போகிறது.

திரு. த. மனோ தங்கராஜ்: மால்ட் எவ்வளவு நாள் இருக்கிறதோ அதைப் பொறுத்துதான் விலை நிர்ணயம் செய்ய வேண்டும். எப்படி விலை நிர்ணயம் செய்கிறீர்கள்?

திரு. வே.பொ. சிவசுப்பிரமணி: மால்ட் அயல்நாட்டில் தயாரிக்கப்பட்ட அயல் நாட்டு மதுபானம். 12 வருடங்கள் பழையவை அல்லது சில 70 வருடங்கள் பழையவை என்று இருக்கும். இது இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுபான வகையைச் சேர்ந்தது.

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை துறை: மதுபானங்களை 3 வகைகளாகப் பிரிக்கலாம், Ordinary, medium and premium என்று. Ordinary மற்றும் medium–க்கு அரசே ஒரு விலையை நிர்ணயம் செய்கிறது. 12 வருடங்கள் பழமையான Premium brand-க்கு ஒரு பாட்டிலுக்கு 1200 ரூபாய் என்று அடிப்படை விலையை நிர்ணயம் செய்யுங்கள் என்று உற்பத்தியாளரைக் கேட்டுக்கொள்ளும். அரசு அதற்கு ஒரு formula வைத்திருக்கிறது. அதை base செய்து விலையை நிர்ணயம் செய்கிறோம். அதற்கு Board approval -க்குப் பின்னர் அரசுக்கு அனுப்பப்பட்டு அங்கும் ஒப்புதல் பெற்று விலையை fix செய்கிறோம். Ordinary and medium–க்கு limitation இருக்கிறது. ஆனால் premium-க்கு எந்த limitation-னும் இல்லை.

திரு. த. மனோ தங்கராஜ்: I do agree. But health conditions base செய்து குறைந்தபட்சம் quality-ஐ maintain செய்யுங்கள். Red Lable விட top quality வரவில்லை. ஒரு standard வைத்துக்கொள்ளுங்கள். இந்தந்த content சேர்த்திருக்க வேண்டும் என்று ஒரு minimum condition இருக்க வேண்டும். Alcohol content-ஐ மட்டும் பார்த்தால் போதாது. What are the other supporting contents என்றும் பார்க்க வேண்டும்.

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை துறை: மதுபானங்களில் harmful substance ஏதாவது இருந்தால் அது forensic report–ல் தெரிந்துவிடும். அந்த மாதிரியான நேர்வுகளில் நிறைய இடங்களில் ஆர்டர்களை நிறுத்தியிருக்கிறோம். ஒரு Excise Supervising Officer மதுபான ஆலையிலேயே இருப்பார், அவருடைய அனுமதி இல்லாமல் bottling செய்ய முடியாது. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை குறித்துக்கொண்டு நடவடிக்கை எடுக்கிறோம்.

திரு. மு. திராவிடமணி: Distilled process இல்லையென்று உறுப்பினர் சொல்கிறார், quality இருப்பதுபோலச் செய்து கொடுங்கள். கடைகளில் energy drink ஒன்று red bull என்று டப்பாவில் விற்கிறார்களே அதில் ஏதாவது போதை இருக்கிறதா பள்ளிக் குழந்தைகள் அதை வாங்கிக் குடிக்கிறார்கள்.

திரு. த. மனோ தங்கராஜ்: அது வெறும் cool drink தான்.

திரு. ஒய். பிரகாஷ்: ஒவ்வொரு வருடமும் 500 மதுக்கடைகள் மூடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. அது தற்போது நடைமுறையில் உள்ளதா?

திரு. வே.பொ. சிவசுப்பிரமணி: ஒவ்வொரு வருடமும் 500 மதுக்கடைகள் மூடப்படுகின்றன.

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை: 2014 ஆம் ஆண்டு மே மாதத்தில் மொத்தம் 6700 மதுக்கடைகள் இருந்தன. தற்போது 4972 கடைகள் தான் உள்ளன.

திரு. ஒய். பிரகாஷ்: உச்சநீதிமன்றம் நெடுஞ்சாலைகளில் மதுக்கடைகள் இருக்கக்கூடாது என்று சொன்ன காரணத்தால் அவை மூடப்பட்டனவா?

திரு. த. மனோ தங்கராஜ்: மதுக்கடைகளை மூடிவிட்ட காரணத்தால் விற்பனை குறையும் இல்லையா?

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை: விற்பனை அதே அளவில் தான் உள்ளது.

No modification was recommended.

MEMORANDUM NO. 13 / 2018 - 2019

Sub: Amendments to the Tamil Nadu Brewery Rules, 1983

The Deputy Secretary stated that in exercise of the powers conferred by Section 54 of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937), the Government issued amendments to the Tamil Nadu Brewery Rules, 1983.

(G.O. Ms. No.21, Home, Prohibition and Excise (III) Department, dated 21.7.2015)

The Committee observed that there is a delay of nearly two years in placing the above Notification on the Table of the House.

துணைச் செயலாளர், சட்டமன்றம்: Export செய்வதைப் போல import–ம் செய்கிறீர்களா?

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை துறை: பீர் வகைகள் நிறைய capacity இருக்கிற காரணத்தால் அதை ஏற்றுமதி செய்கிறோம். இறக்குமதி எதுவும் செய்வதில்லை.

திரு. மு. திராவிடமணி: Notification late ஆக place ஆகியிருக்கிறதே?

துணைச் செயலாளர், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை துறை: இனிவருங்காலங்களில் உரிய காலத்தில் வைத்துவிடுகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

The Committee decided to reiterate its earlier recommendation that the Notifications should be placed before the Assembly within 6 months from the date of issue of Notification.

MEMORANDUM NO. 14 / 2018 - 2019

Sub: Amendments to Tamil Nadu Indian -made Foreign Spirits (Manufacture) Rules, 1981, Tamil Nadu Brewery Rules, 1983, Tamil Nadu Mass Wine Rules, 1984, Tamil Nadu Wine (Manufacture) Rules, 2006,Tamil Nadu Distillery Rules, 1981 and Tamil Nadu Rectified Spirit Rules, 2000.

The Deputy Secretary stated that in exercise of the powers conferred by Sections 16, 17-B, 17-C, 17-D, 17-E, 18, 18-A, 18-B, 18-C, 20-A, 21, 23 and 54 of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937), the Government issued the following notifications:-

NOTIFICATION I-IV

(G.O. Ms. No.1, Home, Prohibition and Excise (III) Department, dated 4.1.2017)

No modifications were recommended.

(G.O. Ms. No.15, Home, Prohibition and Excise (II) Department, dated 13.6.2017)

No modification was recommended.

(G.O. Ms. No.24, Home, Prohibition and Excise (VI) Department, dated 21.6.2012)

The Government issued amendment to the Tamil Nadu Rectified Spirit Rules, 2000.

The Committee observed that there was a delay of 4 years and 11 months in placing the above Notification on the Table of the House after its Publication in Tamil Nadu Government Gazette dated 11.7.2012.

The Committee further observed that the details of 'existing Rule' and the 'Rule as amended' both in English and Tamil have not been included in the above Notification.

துணைச் செயலாளர், சட்டமன்றம்: Notification-ஐ 4 years and 11 months delay ஆக வைத்திருக்கிறீர்கள்.

துணைச் செயலாளர், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை துறை: தவறு ஏற்பட்டுவிட்டது, சரிசெய்து விடுகிறோம். வருங்காலங்களில் உரிய காலத்தில் வைத்துவிடுகிறோம்.

The Committee decided to reiterate its earlier recommendation that Rules framed or Notifications issued in pursuance of Legislative Powers, be placed on the Table of the House within a period not exceeding six months from the date of publication in the Government Gazette and whenever amendment to rules are issued the 'Existing Rule' and 'Rule as amended' be appended as Annexure to the rules placed on the Table of the House in order to have a proper understanding of the amendments.

MEMORANDUM NO. 15 / 2018 - 2019

Sub: Amendments to the Tamil Nadu Liquor (Possession for Personal Consumption) Rules, 1996.

The Deputy Secretary stated that in exercise of the powers conferred by Section 54 read with clause (iii) of the proviso to sub-section (1) of Section 4 of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937), the Government issued amendment to the Tamil Nadu Liquor (Possession for Personal Consumption) Rules, 1996.

(G.O. Ms. No.14, Home, Prohibition and Excise (VI) Department, dated 9.6.2017)

In the said Rules, in rule 2, for the TABLE, the following TABLE has been substituted, namely:-

"THE TABLE

Liquor	Quantity (in litres)
(1)	(2)
Indian Made Foreign Spirits	4.5
Imported Foreign Liquor	4.5
Beer	7.8
Wine	9."

It seems that if huge quantity of liquor is allowed to have possession at a time for personal consumption, it may indirectly allow the individual to engage in illicit trade of liquor.

துணைச் செயலாளர், சட்டமன்றம்: Personal consumption M.L.-ஆக இருந்ததை Litre-க்கு கொண்டுவந்திருக்கிறீர்கள் அதற்கு என்ன காரணம்?

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை துறை: பல வருடங்களாக ஒரே மாதிரியிருந்த நிலையைத்தான் மாற்றியிருக்கிறோம். இதுகுறித்து நிறைய petitions எங்களுக்கு வந்தன எனவே, மற்ற மாநிலங்களில் எல்லாம் அதிகமாக இருந்ததை compare செய்தோம். உதாரணத்திற்குச் personal consumption-ல் மற்ற மாநிலங்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால்,

கர்நாடகாவில்–	IMFL	4.6	litres
	IFL	9.1	litres
	Beer	18.2	litres
	Wine	9	litres
பாண்டிச்சேரியில்–	IMFL	4.5	litres
	IFL	4.5	litres
	Beer	9	litres
டெல்லியில்–	IMFL	18	litres
	IFL	18	litres
	Beer	36	litres
	Wine	36	litres

திரு. த. மனோ தங்கராஜ்: Personal consumption-ஐ நீங்கள் அதிகமாக்கியிருப்பதை misuse செய்து sales செய்ய மாட்டார்களா?

ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை துறை: Amendment கொண்டுவந்த நேரத்தில் highways–ல் problem இருந்ததால் 65% கடைகளை நாங்கள் காலி செய்தோம். நிறைய பேர் Airport-ல் இருக்கும் duty free shop-ல் வாங்கிக்கொள்வதால் அதையெல்லாம் கருத்தில்கொண்டு limit–ஐ increase செய்தோம்.

துணைச் செயலாளர், சட்டமன்றம்: Most of the notifications காலதாமதமாக வைத்திருக்கிறீர்கள். இனிவருங்காலங்களில் காலதாமதத்தைத் தவிர்த்து உரிய காலத்திற்குள் வைக்குமாறு குழு கேட்டுக்கொள்கிறது.

After some discussion, no modification was recommended.

MEMORANDUM NO. 16 / 2018 - 2019

Sub: Notification issued under the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974.

(G.O. Ms. No.316, Home (Transport-I) Department, dated 1.4.2015)

The Deputy Secretary stated that in exercise of the powers conferred by clause (1) of Section 20 of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974), the Government to grant exemption from payment of life time tax for the Black Mica Metallic Fortuner Diesel Air-conditioned car bearing chassis No. MBJ11JV6104028143 and engine No.1KDU526593 belonging to the Tamil Nadu State Legal Services Authority, Chennai.

The Committee observed that there was a delay of more than $1^{1/2}$ years in placing the above notification on the Table of the House, after its publication in the Tamil Nadu Government Gazette, dated 22.4.2015.

DEPUTY SECRETARY: Exemption from Life time tax may be accepted as the vehicle is bought for the use of the Hon'ble Executive Chairman, Tamil Nadu State Legal Services Authority, Chennai.

After some discussion, no modification was recommended.

Thursday the 26th September, 2019

The Committee on Delegated Legislation met at 4-30 p.m. on Thursday, the 26th September, 2019 in the Conference Hall, Tamizhagam Government Guest House, Udhagamandalam-643 001.

The following Members were present:

CHAIRMAN

Thiru S. Ravi

MEMBERS

Thiru. V.P. Sivasubramani
Thiru. O.K. Chinnaraj
Thiru. A. Soundarapandian
Thiru. M. Thiravidamani
Thiru. Y. Prakaash
Thiru. T. Mano Thangaraj
Thiru. S. Rajesh Kumar
Thiru S. Vetrivel
Thiru. S.T.K. Jakkaiyan

SECRETARIAT

Thiru. G. Ganesh . . . Deputy Secretary

Thiru T. Siva Sankar, Deputy Secretary to Government, Law Department was also present.

XXXXX XXXX XXXXX XXXXX
XXXXX XXXX XXXXX XXXXX

The Committee then took up for consideration the Draft Report of the Committee relating to rules, amendments to rules and notifications issued under the Municipal Laws and Prohibition Laws.

After some discussion, The Committee approved the Draft Report (Seventh Report) without any modifications and authorized the Chairman to sign and present the Report to the Assembly on its behalf.

XXXXX XXXX XXXXX XXXXX
XXXXX XXXX XXXXX XXXXX

K. SRINIVASAN
Secretary